Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 99

வியாழக்கிழமை
05 மார்ச் 2026

மாசி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

யாழ்ப்பாணத்துக்கு நேற்று

## 3 லட்சம் லீற்றர் பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
யாழ்ப்பாணத்துக்கு நேற்று மட்டும் 3 லட்சம் லீற்றருக்கு மேற்பட்ட பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மத்திய கிழக்குப் போரைத் தொடர்ந்து, மக்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு »11

## இலங்கையை நெருங்கியது போர் ஈரானியக் கப்பல் மூழ்கடிப்பு!

80 பேர் பலி; பலர் மாயம்

கொழும்பு, மார்ச் 5
இந்தியப் பெருங்கடலில், இலங்கைக்கு மிக அருகாகப் பயணித்த ஈரானியப் போர்க் கப்பலொன்று நேற்றுக் காலை அமெரிக்காவால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மத்திய கிழக்குப் போர், இந்தியப் பெருங் கடல்வரை விரிவடைந்துள்ளது என போரியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். »11



## மனிதாபிமான அடிப்படையில் ஈரானியர்களுக்கு உதவிகள்!

இலங்கை விளக்கம்

கொழும்பு, மார்ச் 5
அமெரிக்கத் தாக்குதலால் மூழ்கிய ஈரானிய போர்க் கப்பலில் இருந்த பலர், இலங்கைக் கடற்படையால் மீட்கப்பட்டுள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் இந்த உதவியை வழங்கியதாக வெளி »11

ஏழாலையில்

## டீசல் பதுக்கிய இருவர் கைது!

800 லீற்றர் டீசல் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5
யாழ்ப்பாணம் - ஏழாலைப் பகுதியில் டீசலைப் பதுக்கி வைத்திருந்த இருவர் நேற்றுக் கைது செய்யப் »11

## பெற்றோல், மண்ணெண்ணெய் இன்று எங்கெங்கே விநியோகம்?

விரிவான விவரம் பக்கம்:-11




ஈரானியக் கப்பல் மூழ்கடிப்பு

## போர்ப் பதற்றத்துக்குள் கவனம்பெற்ற இலங்கை

கொழும்பு, மார்ச் 5
இலங்கையின் கடற்பரப்புக்கு அருகாக, ஈரானியக் கப்பலொன்று அமெரிக்க நீழ்மூழ்கிக் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டுள்ள நிலை »11

காணாமற்போன

## ஆவளை மீனவர்களை மீட்க உதவவில்லை அரசாங்கம்!

சக மீனவர்கள் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 5
வலிகாமம் வடக்கு ஆவளை பகுதியில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் காணாமற்போயுள்ள நிலையில், அந்த மீனவர்களை மீட்பதற்கு அரச தரப்பால் உதவி வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. »11



## காணாமற்போன மீனவர்கள் தொடர்பில் அரசின் அசமந்தம் கண்டனத்துக்குரியது

கஜேந்திரகுமார் எம்.பி. அதிருப்தி

யாழ்ப்பாணம், மார்ச் 5
ஆவளையில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்றநிலையில் காணாமற்போன மீனவர்களை மீட்பதில் அரசாங்கம் அசமந்தத்துடன் செயற்படுகின்றது. இது கண்டனத்துக்குரியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆவளையில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற »11

முச்சந்தி முரளி

"உதவப் போனாலும் சிக்கல், உதவாட்டியும் சிக்கல் எண்டு மாட்டிக்கொண்டு இலங்கை முழிக்குது பாருங்கோ"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4365 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 05 29 30 62 |
| விசேட எழுத்து | Q |

**ஹந்தஹண ராசி சுப பலன்**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1432 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 20 41 59 |

**NLB ஜய**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0391 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 4 0 |

**மெகா பவர்**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2471 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கங்கள் | 46 48 52 61 |

**மஹஜன சம்பத**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6123 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 4 4 0 2 |

**தன நிதானய**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2153 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 12 28 34 65 |
| விசேட எழுத்து | H |

**சுப தவசக்**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0239 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 47 57 |

# பொருளாதாரப் பாதையில் இலங்கை முன்னேற்றம்!

## பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

**2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் மற்றும் நடப்புக் கணக்கு நிலுவையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது- 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்றுமதி வருமானத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காணமுடிகிறது. 2025 ஜனவரியுடன் ஒப்பிடும்போது 2026 ஜனவரியில் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருமானம் 8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. இதில் விவசாயப்பொருள்களின் ஏற்றுமதி 8.8 சதவீத வளர்ச்சியையும், கைத்தொழில் பொருள்களின் ஏற்றுமதி 5.9 சதவீத வளர்ச்சியையும் எட்டியுள்ளது. நாட்டின் நடப்புக்கணக்கைப் பொறுத்தமட்டில், 2025 ஜனவரியில் 100 மில்லியன் டொலராக இருந்த வருமானம், 2026 ஜனவரியில் சுமார் 370 மில்லியன் டொலர் வரை அதிகரித்துள்ளது. இந்த சாதகமான மாற்றத்துக்கு வாகன இறக்குமதி செலவுகள் குறைந்தமை ஒரு முக்கியமான காரணமாகும். சேவைத்துறையைவிட உற்பத்திப்பொருள்களை ஏற்றுமதி செய்வதன்மூலம் ஈட்டப்படும் வருமானம் நாட்டின் பொருளாதாரத்தை நீண்டகாலத்துக்கு வலுப்படுத்தும். உலகளாவிய ரீதியில் நிலவும் நிச்சயமற்ற தன்மையால் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் குறைய வாய்ப்புள்ளபோதிலும், ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் இறக்குமதிச் செலவு குறைப்பு ஆகியவற்றின் மூலம் அந்த இடைவெளியை நிரப்பமுடியும்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0831 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 1 8 0 0 7 0 |

**Super Ball**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3097 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 37 47 59 74 |

**சனிதா**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 19 47 52 57 |
| வெற்றி வாரம் | 5258 |

**SASIRI**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0927 |
| வெற்றி இலக்கம் | 20 22 36 |

**லக்ன ராசி**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| | மீனம் |
| வெற்றி இலக்கம் | 24 27 54 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4809 |

**KAPRUKA**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கம் | 08 11 24 31 |
| வெற்றி வாரம் | 2273 |

**அத கோடிபதி**
| | |
|---|---|
| திகதி | 04.03.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 10 17 55 61 |
| வெற்றி வாரம் | 2923 |

# ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச்சூடு; தாக்குதலாளி கைது

கொழும்பு, மார்ச் 5

ஜிந்துப்பிட்டிப் பகுதியில் நபர் ஒருவரைச் சுட்டுக்கொன்று, இரண்டு சிறுவர்களைக் காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிராண்ட்பாஸில் வைத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 'ஐஸ்' போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

# பாதாளக்குழுக்களின் குற்றங்கள் 17 மாதங்களில் 315 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 5

இலங்கையில் கடந்த 2024ஆம் ஆண்டு முதல் 2025 மே மாதம் வரையான காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய 315 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

22 துப்பாக்கிதாரிகள், 14 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், கூர்மையான ஆயுதத் தாக்குதல்கள் அல்லது ஏனைய தாக்குதல்களில் தொடர்புடைய 50 பேர், குற்றச்செயல்களுக்கு உடந்தையாக இருந்த 142 பேர், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 57 பேர், துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருந்த 22 பேர், ஏனைய செயற்பாடுகளில் ஈடுபட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பொலிஸாரின் முறைகேடுகள் அறிவிக்க வட்ஸ்அப் இலக்கம்

கொழும்பு, மார்ச் 5

பொலிஸ் அதிகாரிகளின் தவறான நடத்தைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக பொதுமக்கள் நேரடியாகப் பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சுக்கு முறையிடுவதற்கான புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கேள்விப் பதில் நேரத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார். பொதுமக்கள் அச்சமின்றிப் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம். 071 859 8888 எனும் வட்ஸ்அப் இலக்கத்தினூடாக பொலிஸ்மா அதிபருக்கு நேரடியாக முறைப்பாடளிக்கலாம்.

அத்துடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் அமைக்கப்பட்டுள்ள தேசிய கருமபீடத்துக்கான துரித [illegible] என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கொழும்பு வந்தது மாலைதீவுக் கப்பல்

கொழும்பு, மார்ச் 5

மாலைதீவுக் கடற்படைக் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ள 48.9 மீற்றர் நீளமான இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக லெப்டினன்ட் கேணல் அஹமட் நபியு மொஹமட் செயற்படுகின்றார். இந்தக் கப்பல் நாட்டில் தங்கியிருக்கும்போது, அதன் குழுவினர் கொழும்புப் பகுதியில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்வையிட

# மத்திய கிழக்கு விமானசேவைகள் பாதுகாப்புடன் ஆரம்பம்!

## எயார்லைன்ஸ் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவிய அசாதாரண சூழல் காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த விமான சேவைகளைப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளுடன் நேற்று மீண்டும் ஆரம்பித்துள்ளன.

பயணிகளின் பாதுகாப்புக்கு முதலிடம் வழங்கி, தேவையான அனைத்துப் பாதுகாப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இந்த விமானங்கள் இயக்கப்படுகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளின் வான்வெளி நிலைமைகளை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தொடர்ந்து கண்காணித்துவருகின்றது.

நிலைமைகளைப் பொறுத்து, ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமானசேவைகள் குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ள பயணிகள், தங்களது விமான நேரங்கள் மற்றும் அட்டவணை மாற்றங்கள் குறித்த சமீபத்திய தகவல்களை www.srilankan.com எனும் இணையத்தளமூடாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுக் கையிருப்பு தாராளம்; தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை!


## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 5**
**மத்திய கிழக்குப் பதற்றங்களுக்கு மத்தியில் நாட்டில் எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்படும் எனப் பரப்பப்படும் தகவல்களை நிராகரித்துள்ள வர்த்தகத்துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, லிட்ரோ எரிவாயு விநியோகம் தடையின்றித் தொடரும் எனத் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மார்ச் மாதத்தில் மட்டும் 38,000 மெற்றிக்தொன் எரிவாயு 10 கப்பல்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளது.
2026ஆம் ஆண்டுக்காக மொத்தம் 3 இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயுவை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது.
ஜனவரியில் 24,000 மெற்றிக் தொன் மற்றும் பெப்ரவரியில் 28,000 மெற்றிக்தொன் எரிவாயு ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
அதேவேளை தனியார் நிறுவனமான லாப்ஸ் நிறுவனம் சந்தைக்கு முறையாக எரிவாயுவை விநியோகிக்காததால், லிட்ரோ சிலிண்டர்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.
லாப்ஸ் நிறுவனம் தனது நுகர்வோருக்குத் தடையின்றி எரிவாயு வழங்க ஏதுவாக, அரச நிறுவனத்தின் ஊடாக 10,000 மெற்றிக்தொன் எரிவாயுவைக் கொள்வனவு செய்ய தற்காலிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. எரிவாயுக் கையிருப்பு மற்றும் இறக்குமதியில் எவ்வித சிக்கலும் இல்லை - என்றார். (ச-இ)

## நாடாளுமன்றில் துன்புறுத்தல் விசாரணை அறிக்கை சபையில்

கொழும்பு, மார்ச் 5
நாடாளுமன்ற பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பான இறுதி விசாரணை அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
நேற்றைய நாடாளுமன்ற அமர்வின்போது சபாநாயகரால் இந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி சுஜாதா அலகப்பெருமவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் இறுதி அறிக்கை கடந்த நவம்பர் மாதம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய, இந்த அறிக்கை தற்போது சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




## அதிக விலைக்கு டீசல் பதுக்கி விற்றவர் கைது;

திருகோணமலை, மார்ச் 5
திருகோணமலை புல்மோட்டை நகரில் சட்டவிரோதமான முறையில் அதிக விலைக்கு டீசல் விற்பனை செய்த கடை உரிமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சட்டவிரோதமாகச் சேமித்து வைக்கப்பட்ட டீசல் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரிடமிருந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 390 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## 9 கிலோ கஞ்சா சுருவிலில் மீட்பு

### ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 5
ஊர்காவற்துறை சுருவில் பகுதியில் 9 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே மேற்படி கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில்
முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)



## தரமற்ற நிலக்கரி இறக்குமதி விசாரணை அறிக்கை கையளிப்பு

கொழும்பு, மார்ச் 5
நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்காக ஒன்பது நிலக்கரி கப்பல்கள் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பான தனது விசாரணை அறிக்கையை இலங்கைபொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழுவிடம் கையளித்துள்ளது. தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக, உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் பணிப்புரைக் கமைய பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்திருந்தது. அந்த விசாரணை அறிக்கையையே தற்போது கையளிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




## மணிக்குரலுக்கு வந்த சோதினை

கூடுதலா எல்லா இடங்களிலையும் ரவுண் பக்கம் போனால் அங்க 'மணிக்குரல்' சேவை இருக்கிறதைப் பார்த்திருப்பியள். அப்பிடி யாழ்ப்பாணம் ரவுணிலையும் விளம்பரசேவை இருந்தது. யாழ்ப்பாணம் ரவுணில இருக்கிற கடையளைப் பற்றின விளம்பரங்களும் இடைக்கிடை சினிமாப் பாட்டுகளும் அந்த மணிக்குரல் விளம்பர சேவையில போடுவினம். நாள் முழுக்க ஓயாமல் அந்த விளம்பரச்சத்தம் ரவுண் முழுக்கக் கேட்டுக்கொண்டே இருக்கும். அந்த மணிக்குரல் விளம்பரச்சத்தம் கேட்டால் தான், ரவுணுக்கே ஒரு கெத்து வந்தமாதிரி இருக்கும். ரேடியோ கேட்டுப் பழகின எங்கட பரம்பரைக்கு இந்த மணிக்குரல் சேவையும் சின்ன ஒரு ரேடியோ மாதிரித்தான். இப்ப என்னெண்டா கிட்டத்தட்ட ஒரு மாதமா அந்த மணிக்குரல் சத்தம் கேக்கவேயில்லை. என்ன, ஏதெண்டு பட்சி விசாரிச்சுப் பாக்க சில தகவல்கள் கிடைச்சுது.

இந்த மணிக்குரல் சேவை ஒண்டும் சும்மா விளையாட்டுத்தனமாச் செய்யிறேலை., அதுக்கெண்டு ரெண்டர் கோல் பண்ணி, வற்வரியோட சேர்த்து இந்தமுறை 32 லட்சம் ரூபாவுக்கு எடுத்திருக்கினம். இந்தச் சேவையில வாற வருமானத்தில தான் அஞ்சு குடும்பங்களின்ர வாழ்க்கையே இருக்குது. ஒவ்வொரு கடை கடையா, கொம்பனி கொம்பனியா ஏறி இறங்கி விளம்பரம் கேட்டு, காசு சேர்த்துத்தான் உந்தச் சேவையைக் கொண்டிழுக்கவேணும். அப்பிடி கஷ்டப்பட்டு, இவ்வளவு காசைப் போட்டுச் செய்யிற விளம்பர சேவை இலங்கையில இருக்கிற எல்லா மாவட்டத்திலையும் அந்தந்த ரவுணில இருக்கு. ஆனால் யாழ்ப்பாண ரவுணில இருக்கிற சேவை மட்டும் பொலிஸ்காரருக்கு ஏதோ கண்ணுக்க குத்தியிருக்குது. அதால ஒருமாதத்துக்கு முதல் திடீரெண்டு ஒருநாள் யாழ்ப்பாணம் பொலிஸ் ஓ.ஐ.சி. வந்து 'உடனடியா இந்தச் சேவையை நிப்பாட்டு' எண்டு அங்க இருந்த பொம்பிளைப்பிள்ளையிட்ட சொல்லியிருக்கிறார். உடனேயே இதைப்பற்றி முனிசிபல் ஆணையாளருக்கு சம்பந்தப்பட்டவை அறிவிக்க, அவரும் 'ஒரு பிரச்சினையுமில்லை, நீங்கள் தொடர்ந்து நடத்தலாம்' எண்டு சொல்லியிருக்கிறார். அதை நம்பி இவை திரும்ப ஒப்பீஸை திறந்தால், அடுத்தநாளே அதே ஓ.ஐ.சி. வந்து கோபமாக் கத்தி, பூட்ட வைச்சிட்டார். ஏன் பூட்டினவை, எதுக்குப் பூட்டினவை எண்டு ஒரு காரணமும் அவர் அப்ப சொல்லேல.

பிறகு சம்பந்தப்பட்டவை ஆணையாளரில இருந்து ஆளுநர் வரைக்கும் ஓடித்திரிஞ்சு கதைச்ச பிறகு பொலிஸ்காரரும், இந்த விளம்பரசேவையை நடத்தினவையும் வைச்சு ஒரு கூட்டம் நடந்திருக்குது. ஆளுநர் தான் அதை நடத்தினவர். அந்தக் கூட்டத்துக்கு வணிகர் சங்கக்காரரும் போயிருக்கினம். 'எங்கட கடையளில யாவாரம் செய்ய இவையின்ர விளம்பரசேவைச் சத்தம் இடைஞ்சலாக் கிடக்கு' எண்டு வணிகர் சங்கக்காரர் சொல்லியிருக்கினம். 'வணிகர் சங்க முறைப்பாட்டாலதான் நாங்கள் பூட்ட வைச்சம். 2007ஆம் ஆண்டு கொண்டந்த சட்டத்தில சொன்னதைவிடக் கூட 'டெசிபலில' ( ஒலியை அளக்கிற அலகுதான் டெசிபல்) லவுட்ஸ்பீக்கரைப் போட்டிருக்கினம். பெர்மிசன் எடுக்காமல் கன இடங்களில புதிசாவும் லவுட்ஸ்பீக்கரும் கட்டியிருக்கினம். அதால தான் பூட்டினது'எண்டு பொலிஸ்காரர் சொல்லியிருக்கினம். ஆனால் இனிமேல் அந்த டெசிபலைக் குறைச்சு போடலாமோ இல்லையோ எண்டு சொல்லாமலே கூட்டம் இடையில முடிஞ்சு போட்டுதாம். சட்டப்படி நடக்க வெளிக்கிட்ட பொலிஸ்காரர் ஏன் மற்ற ரவுண்களில் இயங்கிற விளம்பரசேவையை நிப்பாட்டேலை? யாழ்ப்பாணம் ரவுணிலகூட டெசிபலில ஒலிபரப்புச் செய்யினம் எண்டால், அதை முதலே குறைக்கச் சொல்லி இருக்கலாமே? எதுக்கு இப்பிடித் திடீரெண்டு பூட்டோனும்? ஒரு முன்னறிவித்தலும் ஏன் குடுக்கேலை? டெசிபல் கூடவாப் போடுறது சூழலுக்குக் கேடுதான். ஆனால் இந்தத் தொழிலை நம்பியிருந்தவையின்ர கதியை ஒருக்கா ஆரும் யோசிச்சுப் பார்த்து, டெசிபலைக் குறைச்சு சேவையை நடத்துங்கோ எண்டு அனுமதி குடுக்கலாமே? அதையாவது அதிகாரிமார் செய்வினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்நீர் புகும் அபாயத்தில் 75 ஏக்கர் வயல் நிலங்கள்!

## செம்மலை பெரியகுளக்கட்டு உடைப்பால் விவசாயிகள் அந்தரிப்பு

**முல்லைத்தீவு, மார்ச் 5**

**முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் உள்ள பெரியகுளம் அணைக்கட்டு மூன்று இடங்களில் உடைப்பெடுத்துள்ளதால் சுமார் 75 ஏக்கர் வயல் நிலங்களுக்குள் கடல்நீர் உட்புகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

செம்மலை கமக்கார அமைப்புப் பிரிவிலுள்ள பெரியகுளம் சுமார் 75 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கும் பிரதான ஆதாரமாகும். அணைக்கட்டு உடைந்துள்ளதால் கடல்நீர் குளத்துக்குள் செல்கின்றது. இதனால் விவசாய நிலங்கள் உவர்நிலங்களாக மாறும் அபாயமும், கிராமத்தின் குடிதண்ணீர்க் கிணறுகள் மாசடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. அணைக்கட்டு உடைப்பால் அவதிப்படும் அதேவேளை, புளிய முனைப் பகுதியில் காட்டுயானைகளாலும் விவசாய நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவைதொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக்கொண்டு செல்லப்பட்டநிலையில் கடந்த 23ஆம் திகதி கமநல உதவி ஆணையாளரைச் சந்தித்துப் பேசிய அவர் அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் அதிகாரியை நேரில் அழைத்துச்சென்று உடைப்புக்களைச் சரிசெய்வது தொடர்பாக ஆராய்ந்தார். (ச-246)

# சமத்துவம் பேணுவோம்

**ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது கடவுள் அல்ல மனித சமுதாயமே. மனிதனே சமூக, பொருளாதார, அரசியல், சாதி ரீதியாக பாகுபாடுகளை வகுத்து மனி**தத்தைப் பிரித்து வைத்திருக்கிறான். இதனை நிலை நிறுத்துவதில் அன்றுமுதல் இன்றுவரை குறியாக இருக்கிறான். சமத்துவத்தை ஆதிமனிதப் படைப்பின் போதே இறைவன் வெளிப்படுத்தியுள்ளார். நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள். சகோதர, சகோதரிகள் என்பது இறைவன் வகுத்த கோட்பாடு. ஆகவே எம் மத்தியில் புரையோடிப்போயுள்ள ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கிய நாமே அவற்றைக் களைய முயற்சிக்கவேண்டும். சமூக அமைப்புகளை சமத்துவ நீரோட்டத்தில் நிறுவவேண்டும்.

ஒருவேளை உணவைப்பெற என்ன செய்வோம் என்று பலர் தவிக்க மூக்குமூட்ட உணவருந்தி, செரிமானத்திற்கு மருந்தைத் தேடும் நிலை மாறி ,பகிர்ந்து வாழும் பண்பை வளர்ப்போம். செல்வந்தர் ஒருவரின் வாசலிலே, மிச்சம் மீதி உணவை எதிர்பார்த்து தவம் கிடந்த ஏழைக்கு எதுவும் வழங்காத செல்வந்தர் இறப்பின் பின் எரிநரகிலும், ஏழை இலாசர் சொர்க்கத்திலும் சேர்ந்ததாக இறைவார்த்தை கூறுகிறது. (லூக் 16 1931) துன்பத்தில் வாடுவோருக்கும் பசியில் பரிதவிப்போருக்கும் அடிமையாக அலைவோருக்கும் உதவ முன்வருவோம். இதுவே அறநெறிக் கடமையென உணர்வோம்

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 5

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ரன் கல்லூரி அதிபர் திருமதி கௌரிஅம்பாள் அருள்மொழி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானசம்பந் தப்பிள்ளை ஞானசுந்தரன், கௌரவ விருந்தினராக காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி தயானந்தன் துஷ்யந்தன், கௌரவ விருந்தினராக யாழ்ற்றோனியன் கந்தையா விக்னேஸ்வரன் ஆகியோரும்கலந்துகொள்ளவுள்ளனர். (ச-422)



நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழாவின் மாசிமக தீர்த்தத் திருவிழா கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)

# புனிதபூமி மக்கள் கட்சி அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி, மார்ச் 5

புனிதபூமி மக்கள் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு, கிளிநொச்சி யில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கட்சியின் தலைவர் கணபதிப்பிள்ளை ஆனந்தமூர்த்தி (ஜேம்சன்) தலைமையில் இடம்பெற்ற, நிகழ்வில் உபதலைவர் தியாகராசா ஜெகதீஸ்வரன், செயலாளர் சசிகரன் மிதுலா, உப செயலாளர் அருளாணந்தம் மதிவன்னன், பொருளாளர் ஜெகநாதன் ரகுநாதன், கட்சியின் ஆலோசகர் கார்த்திகேசு யோகராசா, யாழ்.மாவட்ட அமைப்பாளர் சிவகுரு மதிவண்ணன், முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திருச்செல் வம் இரவீந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் பேபி வேலுப்பிள்ளை (தேசத்தாய்) ஆகியோர் கலந்துகொண்டனர். (க-20)



# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். காலையிலேயே கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்**

**பொருள்:** பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.




# உக்கிரமாகும் மத்திய கிழக்கும் சிக்கலில் தவிக்கும் இலங்கையும்..!

மத்திய கிழக்கில் கடந்த ஐந்து நாள்களாக இடம்பெற்றுவரும் போர் தற்போது மேலும் உக்கிரம் பெற்றிருக்கின்றது. ஆரம்பத்தில் ஈரான் – இஸ்ரேல் – மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் என்றிருந்த போரியல் இலக்குகள், தற்போது வெளிநாட்டுத் தூதரகங்கள், ஆடம்பர மாளிகைகள், யுனெஸ்கோ பாரம்பரிய மையங்கள், எரிவாயு உற்பத்தித் தளங்கள், கச்சா எண்ணெய்க் கிணறுகள், விமானநிலையங்கள் என மாற்றம் பெற்றிருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகள், தத்தமது பகுதிகளில் இருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றவேண்டும், அத்துடன் அமெரிக்க இராணுவ நிலைகளை அகற்றவேண்டும் என்ற பொதுவான அறிவிப்பின் கீழேயே இந்தப் போர் விரிவாக்கத்தைச் செய்திருக்கின்றது ஈரான்.

ஈரானில் இடம்பெறும் போரில் இலங்கைக்கு நேரடிப் பாதிப்பு இருக்காது. மாறாக, மறைமுகப் பாதிப்பே உணரப்படும் என்றே பொருளியல் நிபுணர்களும், போரியல் வல்லுநர்களும் கூறினார்கள். அந்தக் கருத்துகளில் உண்மைத்தன்மை இல்லாமலில்லை. ஆனால், போர்க்களத்தின் ஐந்தாவது நாளில் விடுக்கப்பட்ட அறிவிப்புகளும், மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளும் ஏற்படுத்தப்போகும் பாதிப்பு இலங்கைக்குமானது. இந்தப்போரில் சிவிலியன் இலக்குகள் தாக்கப்படும் வேளையில், அதனால் பாதிக்கப்படும் முதலாவது பிரிவாக மத்திய கிழக்குக்கான வெளிநாட்டுப் பணியாளர்களே காணப்படுவார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக கட்டாரில் ஈரான் மேற்கொண்ட தாக்குதலில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தி யும் இடியாக இறங்கியிருக்கின்றது. எனவே, எம்மவர்கள் தொடர்பில் இனியும் நாம் அஞ்சாமல் இருக்க முடியாது.

ஈரானின் சர்வதேச வர்த்தகத்தை முடக்கி, அந்த நாட்டைச் செயலிழக்கச் செய்வது இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகுவின் நீண்டகாலக் கொள்கை. அதை அவர் தற்போது மீண்டும் ஒருதடவை வலியுறுத்தியுள்ளார். இதை மேற்குநாடுகள் சாதகமாகப் பரிசீலிக்கும்நிலையில், ஹோர்முஸ் நீரிணையை முற்றாக முடக்கி அதிர்ச்சி அளித்திருக்கின்றது ஈரான். உலகில் 20 வீதமான எண்ணெய் வர்த்தகத்தின் பிரதான மார்க்கம் ஹோர்முஸ் நீரிணைதான். அது முடக்கப்படும் பட்சத்தில் எரிபொருள்கள் கிடைப்பதில் உலகளாவிய ரீதியில் தட்டுப்பாடும் தாமதங்களும் ஏற்படும். ஈரானில் இருந்து அல்லது ஹோர்முஸ் ஊடாக இலங்கைக்கு எரிபொருள் வருவதில்லையே என்பது இதில் விவாதப்புள்ளியாக அமையலாம். அதை மறுப்பதற்கு இல்லை. ஆனால், ஹோர்முஸ் நீரிணையை முடக்கி, கண்ணில் தென்படும் கப்பல்களையெல்லாம் தாக்குவோம் என்று அறிவித்துள்ள ஈரானுக்கு, இதர கடற்பகுதிகளில் பயணிக்கும் கப்பல்களைத் தாக்குவதற்கு எவ்வளவு நேரமெடுக்கும்?

**இது கண்டம்விட்டுக் கண்டம் பாயும் கணை களின் காலம். 10 ஆயிரம் தொடக்கம் 12 ஆயிரம் கிலோமீற்றர்கள் வரை பறந்துசென்று இலக்கைத் துல்லியமாகத்** தாக்கக்கூடிய ஏவுகணைகள் இன்று பொதுவாகப் போய்விட்டன. இவ்வாறான நிலையில், ஈரானுக்குத் தொலைவாக – இன்னொரு கடற்பரப்பில் இடம்பெறும் கப்பற்போக்குவரத்து 'மிகப் பாதுகாப்பானது' என்று கூறுவதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. எனவே, இலங்கையைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் இந்தப் பேராபத்தை உரிய கனதியுடன் அரசாங்கம் அணுகவேண்டும். ஏனெனில், இந்தப் போரால் இலங்கை நேரடியாகப் பாதிக்கப்படும் சாத்தியங்கள் தற்போது தெளிவாகத் தெரிகின்றன.

# 11 நெற்களஞ்சியசாலைகள் 6 மாவட்டங்களில் பாழடைவு

## 9 கோடி ரூபா செலவு வீண்

**கொழும்பு, மார்ச் 5**

**உலக வங்கியின் நிதியுதவியுடன் இலங்கையின் 6 மாவட்டங்களில் சுமார் 9 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 11 நெற்க் களஞ்சியசாலைகள், எவ்வித பயன்பாடும் இன்றிப் பாழடைந்துள்ளன என்று அண்மைய தணிக்கை அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

முறையற்ற திட்டமிடல் மற்றும் தேவையற்ற இடங்களில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தால் குறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளின் அறுவடைகளைப் பாதுகாப்பதற்காக இந்தக் களஞ்சியசாலைகள் உருவாக்கப்பட்டன. 6 வெவ்வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.
கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அந்தந்தப் பகுதி விவசாயசேவை மையங்களிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், அவை இதுவரை பயன்பாட்டுக்கு விடப்படவில்லை.
அதேவேளை அநுராதபுரம், மதவாச்சி விவசாயசேவை மையத்தில் சுமார் 24 இலட்சம் ரூபாவுக்கும் அதிக செலவில் ஆரம்பிக்கப்பட்ட களஞ்சியசாலையின் கட்டுமானப் பணிகள் இன்னமும் பூர்த்தியடையாமல் இழுபறி நிலையில் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## வெட்டுக்காயத்துடன் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 5
வெட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம், மொரட்டுவை காலி வீதிப் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.
மொரட்டுமுல்லையைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே உயிரிந்தவராவார். இவருக்கு எதிராக பல வழக்குகள் நிலுவையில் உள்ளதோடு, ஒரு வழக்கு தொடர்பாக சிறையில் இருந்து 21 நாள்களுக்கு முன்னரே விடுதலையாகியுள்ளார்.
இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)

# சாதாரணதரப் பெறுபேறு மே மாதமே வெளியாகும்

கொழும்பு, மார்ச் 5
2025 (2026) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னரே வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இந்த ஆண்டுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளன. முதலாம் கட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது. அதேவேளை, சாதாரண தரப் பரீட்சைக்கான செய்முறைப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை நடத்தப்பட உள்ளன என்றும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



# சர்வதேச கப்பல் கட்டணம் உயர்வால் பொருள்களின் விலை உயர வாய்ப்பு

## போக்குவரத்துச் சேவைகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5
மத்திய கிழக்கில் நிலவும் போர்ப்பதற்றங்கள் காரணமாக, சர்வதேச கப்பல் நிறுவனங்கள் காப்பீட்டுச் செலவுகளை ஈடுகட்ட மேலதிக கட்டணங்களை விதிக்கவுள்ளன. இதனால் இலங்கையில் அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என இலங்கைப் பொருள்கள் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் சங்கத்தின் செயலாளர் இனாம் கபூர் தெரிவித்துள்ளார். காப்பீட்டுச் செலவு அதிகரிப்பால், வளைகுடா நாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் பொருள்களின் இறக்குமதிச் செலவு உயரும். இது நேரடியாக சந்தையில் பொருள்களின் விலையை உயர்த்தும். இலங்கைத் தேயிலையின் மிகப்பெரிய நுகர்வோர் மத்திய கிழக்கு நாடுகளாகும். கப்பல் கட்டண உயர்வால் ஏற்றுமதிச் செலவு அதிகரித்து, தேயிலை தொழிற்றுறை வீழ்ச்சியடையலாம். எனவே, ஏற்றுமதியாளர்களுக்கு விசேட சலுகைகளை அரசு அறிவிக்க வேண்டும்-என்றார். (ச-இ)



நாளை
வெள்ளிக்கிழமை - மாசி 22
06.03.2026
சுபநேரம் : 06.25 – 7.55
ராகுகாலம் : 10.55 – 12.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசின் புதிய நுண்நிதிச் சட்டம் பெண்களை அடிமைப்படுத்தும்

## மன்னாரில் போராட்டம்

**மன்னார், மார்ச் 5**

**நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்டுள்ள 'நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்', சமூகமட்டத்தில் இயங்கும் பெண்களின் சிறுசேமிப்புக் குழுக்களைப் பாதிக்கும் எனத் தெரிவித்து மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் பெண்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூரில் சுயதொழில் புரியும் பெண்கள் மற்றும் கிராமியமட்டத்திலான சிறுசேமிப்புக் குழுக்களைப் புதிய சட்டக் கட்டமைப்புக்குள் கொண்டுவருவதால், தங்களது சுயாட்சியும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும்.

இந்தச் சட்டம் கிராமியச் சேமிப்பு முறைகளை அழித்து, மீண்டும் பெரிய நிதி நிறுவனங்களிடமும் வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களிடமும் பெண்கள் அடிமையாக்கும் எனப் போராட்டத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டது. 'நிதி நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்காதே!', 'கிராமியச் சேமிப்புத்திட்டங்களை அழித்து நிதி நிறுவனங்களை வளர்க்காதே', 'ஏழைகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் அம்சங்களை மாற்றியமையுங்கள்' போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் நிறைவில், பெண்கள் ஊர்வலமாகச் சென்று மன்னார் மாவட்டச் செயலரிடம் ஜனாதிபதிக்கான விசேட மனுவொன்றையும் கையளித்தனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட மாவட்டச் செயலர் இந்தக் கோரிக்கைகளை உடனடியாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். (ச-56,60)

# வீட்டுத்திட்ட நிலைவரம் கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும், வீட்டுத்திட்ட நிலைவரங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள்,வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் வீடமைப்புத்திட்டங்கள், 2018 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வீடமைப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் நிலைவரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், பிரதேச செயலர்கள், மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், வீடமைப்பு அதிகாரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113)



# இலுப்பைக் கடவை ஆலை நவீன வசதிகளுடன் திறப்பு

மன்னார், மார்ச் 5

மன்னார், இலுப்பைக் கடவைப் பகுதியில் அமைந்துள்ள மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரைக்கும் ஆலை, நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்துவைக்கப்பட்டது. மாந்தை மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் கே. கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் அகல்யா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-56)



# வெடுக்குநாறிமலைநோக்கி நல்லூரிலிருந்து யாத்திரை

யாழ்ப்பாணம், மார்ச் 5

மாசிமக விரத நாளை முன்னிட்டு இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் வரலாற்றுப் புகழ்மிக்க வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் நோக்கிய ஆன்மிகத் தரிசன யாத்திரை கடந்த திங்கட்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமானது.

சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு ஆசிகள் வழங்கித் தரிசன யாத்திரையை ஆரம்பித்துவைத்தார்.

தரிசன யாத்திரை வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்ற யாத்திரைக்குழுவினர் சிறப்புப் பொங்கல், பஜனை, பூசை மற்றும் மகேஸ்வரப் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டனர். (ச-66)




# அருட்கலாநிதி எஸ்.சந்துரு மன்னார் ஆயருடன் சந்திப்பு

மன்னார், மார்ச் 5

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ மன்னார் ஆயர் இல்லத்துக்கு வருகை தந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்தது. இதன்போது மன்னார் மாவட்டத்தின் சமூக, பொருளாதார மற்றும் மத ரீதியான தற்போதைய சூழல் குறித்து இருவரும் கலந்துரையாடினர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் குறையும் பிறப்பு வீதம் மனிதவளத்துக்குப் பெரும் ஆபத்து!

## இலங்கை சனத்தொகைச் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 5

**இலங்கையில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் அதேவேளை, இளைஞர்கள் குழந்தை பெற்றுக்கொள்வதைக் குறைத்துவருவது நாட்டின் எதிர்காலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையும் என இலங்கை சனத்தொகைச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் மனோரி வீரதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பு வேகமாக மாறிவருகின்றது. தற்போது நாட்டின் சனத்தொகையில் 18 சதவீதம் பேர் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களாகவுள்ளனர்.

அதேவேளை இளைஞர்கள் தங்களுக்குக் கிடைக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைத் திட்டமிட்டுக் குறைத்து வருகின்றனர்.

புதிய பிறப்புகள் குறைவதால், எதிர்கால உழைக்கும் வர்க்கத்தின் எண்ணிக்கை குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இளைஞர்கள் தங்களின் வயதான பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பில் இருப்பதால், தமக்கென ஒரு புதிய குடும்பத்தை உருவாக்குவதில் நிதி மற்றும் நேரச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

அதிகரித்துள்ள வாழ்க்கைச்செலவு, இளம்தம்பதியினரை 'சிறிய குடும்பம்' என்ற முடிவை நோக்கித் தள்ளுகிறது.

இலங்கையர்கள் 60 வயதுக்குப் பின்னரே ஆரோக்கியத்தில் அக்கறை கொள்கின்றனர். இது முதுமையில் பிறரைச் சார்ந்து வாழும் நிலையை உருவாக்குகிறது. 40 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இப்போதே ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவேண்டும். அப்போதுதான் நோயற்ற முதுமையை எட்டமுடியும்.

அரசாங்கமும் தனியார் துறையும் யூகங்களை விடுத்து, துல்லியமான சனத்தொகைத் தரவுகளைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வகுக்கவேண்டும்- என்றார். (ச-இ)

## சாவகச்சேரி நீதிமன்றுக்கு பிரதம நீதியரசர் வருகை



யாழ்ப்பாணம், மார்ச் 5

இலங்கையின் பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

இதில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. ஆனந்தராசா, கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி அந்தோணிப்பிள்ளை யூட்சன் ஆகியோரும் உடனிருந்தனர். பிரதம நீதியரசர் அடங்கிய குழுவினரை சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதிகள், பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

அதனைத் தொடந்து சாவகச்சேரி நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன் பிரதம நீதியரசர் கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, அலுவலக செயற்பாடுகளையும் பார்வையிட்டார். (ச-28)



பளை இரட்டைகேணி கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. கோவில் அறநெறிப்பாடசாலையின் இணைப்பாளர் து.திரவியரத்தினம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-9)



# வடமராட்சிக் கிழக்கில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்.கத்தோலிக்க முன்னணி மருத்துவர்கள் அமைப்பால், வடமராட்சிக் கிழக்கு கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில், இலவச மருத்துவமுகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கட்டைக்காட்டுப் பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த இலவச மருத்துவ முகாமில் குருதியமுக்கப் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இதய நோய்களுக்கான ஆலோசனை மற்றும் பரிசோதனை, பெண் நோயில், கர்ப்பவதிகளுக்கான ஆலோசனை, புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனை, பற்சிகிச்சை, பல் சீரமைப்புத் தொடர்பான ஆலோசனை, கண் பரிசோதனை, ஆலோசனை, குழந்தை மருத்துவம், விசேட சத்திரசிகிச்சைக்கான ஆலோசனை போன்றன இடம்பெற்றன.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால், விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது. இந்த முகாமில் சுமார் 500க்கும் அதிகமானோர் பயன்பெற்றனர். (ச-22)

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்குக மட்டக்களப்பில் போராட்டம்!

மட்டக்களப்பு, மார்ச் 5

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கக்கோரியும், முன்மொழியப்பட்டுள்ள புதிய அரச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மட்டக்களப்பில் கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் ஆரம்பமான இந்தப் போராட்டம், நகரின் முக்கியமான வீதிகள் வழியாகச் சென்று காந்திப் பூங்காவை வந்தடைந்தது.

இதில் மாணவர்கள், இளைஞர்கள், சிவில் சமூக அமைப்புகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (ச)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
### கூட்டுறவு உற்பத்திப் பொருட்களின் காட்சிக்கூடம் அமைத்தலுக்கான கூறுவிலை கோருதல்

- சபையின் நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.
- ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணம் ஒன்றை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் 05.03.2026 ம் திகதியிலிருந்து 26.03.2026 ம் திகதி வரை மு.ப.9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் யாழ். மாவட்டக்கூட்டுறவுச்சபையின் தொலைபேசி இலக்கம் 021 222 2324 அல்லது Email jaffnadcc1@gmil.com ஆகியவற்றின் மூலம் மேலதிக தகவல்கள் தரவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 05.03.2026 ம் திகதியிலிருந்து 26.03.2026 ம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை வேலை மேற்கொள்ளவுள்ள இடத்தினை பார்வையிடலாம்.
- கேள்விக் கூறுவிலைகளை தயாரித்து **தலைவர் யாழ் மாவட்டக்கூட்டுறவுச்சபை. 2 ம் மாடி வீரசிங்கம் மண்டபம். இல.12. கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 26.03.2026 ம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
- பிந்திய கேள்விக்கூறுகள் நிராகரிக்கப்படும்.
- கேள்வி கோரல் நேரம் முடிந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விக்கூறுகள் திறக்கப்படும்.

**வேலை விபரம்**
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபையின் கூட்டுறவு உற்பத்திப் பொருட்கள் காட்சிக் கூடம் அமைத்தல்.

தலைவர்,
யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை

(cr.47167) N-1


## பெயர் மாற்றம்

கட்டைக்காடு முள்ளியான் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் காசி தயாபரன் (காசிநாதன் தயாபரன்) ஆகிய நான் எனது பெயரை **காசிநாதன் தயாபரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **காசிநாதன் தயாபரன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs 60909) (N-1)

**காசிநாதன் தயாபரன்**

## தங்கத்தின் விலை திடீரெனச் சரிவு!

உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்ததை அடுத்து, இலங்கையில் தங்கத்தின் விலை 13,000 ரூபா வால்குறைந்துள்ளது என்று தங்க சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன. அதன்படி நேற்று கொழும்பு செட்டியார்தெரு தங்கச் சந்தையில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 376,500 ரூபா வரைகுறைந்துள்ளது. நேற்றுமுன்தினம் இதன் விலை 388,500 ரூபாவாகக் காணப்பட்டது. இதேவேளை, நேற்றுமுன்தினம் 420,000 ரூபாவாகக் காணப்பட்ட 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை நேற்று 407,000 ரூபா வரைவீழ்ச்சியடைந்துள்ளதாக தங்கச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 05 . 1982



மறைவு 05 . 03 . 2008

**செல்வன் இராசேந்திரம் கருணாகரர்**
(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – வவுனியா)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்.

சதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(CS 60900) J-1

உன் பிரிவால் வாடும்
பெற்றோர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 03 . 1944



மறைவு 14 . 02 . 2025

கடந்த (14.02.2025) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் அல்லிக்குட்டி சின்னத்துரை

அல்லிக்குட்டி பெற்றெடுத்த இடைக்குட்டியே
இளைய பிள்ளை அன்பு தனில் முதல் குட்டியே
சமூக சேவகனாய் பல் நிலையில்
நீ செய்த சேவை தவிர்க்கமுடியா சமூகத்தின் தேவை
ஆலய நிர்வாகியாய்
சனசமூக நிலைய ஸ்தாபகராய்
இணக்க மன்ற தலைவராய்
விவசாய சம்மேளன உறுப்பினராய்
விவசாய மன்னரெனும் பட்டத்தை பெற்றவராய்
பொருளாதார சுமையிலும் பதின்மூன்று
பிள்ளைகளை பெற்று நல்வாழ்வுக்கு
வழிகாட்டியது மட்டுமன்றி
சமூதாயத்திற்கும் நல்வழிகாட்டி மறைந்த
எங்கள் குடும்பத்தின் குல தெய்வமே
உன் ஓரண்டு நினைவில் நின்று ஆண்டவரை
வேண்டுகிறோம் உங்கள் பூரண ஆத்மா சாந்திக்காக !!!

அவர்களின் முதலாம்ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நாளை (06.03.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து மதியபோச நிகழும் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(cs 22573) (N)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 06 . 11 . 1950



மறைவு 05 . 02 . 2026

கடந்த 05.02.2026 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
### கணேசன் (நடேசு)ஜெயதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.03.2026) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 07.03.2026 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்)** நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உப்புமடம் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு.


(cs.60899) (N-1)

குடும்பத்தினர்
077 711 1717
077 950 1469

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்கள்: ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம் - வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.



கொடிகாமம் - வெள்ளாம்போக்கட்டிக் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட, கிராம அலுவலரால் தெரிவுசெய்யப்பட்ட 21 மாணவர்களுக்கு சிகரம் நிறுவனத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வெள்ளாம் போக்கட்டி பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)



## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 5

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பும், உரும்பிராய் இளைஞர் சனசமூக நிலையமும் இணைந்து புலம்பெயர் வாழ் நண்பர்களின் நிதி அனுசரணையில் ஏற்பாடுசெய்து நடத்திய வருடாந்த மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய அனைவருக்கும் பயன்தரு மரக்கன்றுகளும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன. (ச-66)



யாழ்ப்பாணம் , மார்ச் 5சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 2005 உயர்தரப் பிரிவு மாணவர்களின் அணியினரால் முல்லைத்தீவு - உடுப்புகுளம்தமிழ்வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர் களுக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச)

## மாசிமக உற்சவம்



யாழ்ப்பாணம், மார்ச் 5

மீசாலை வடக்கு கட்டு வைரவர் ஆலய வருடாந்த மாசிமக விரத உற்சவம் கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. பொங்கல் வழிபாடுகளைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் வைரவப் பெருமானுக்குச் சிறப்பு அபிஷேகம், பூஜை வழிபாடுகள் நடைபெற்றுத் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானமும் பரிமாறப்பட்டது. ஆலயப் பிரதமகுரு நடேசன் குகநாதன் மாசிமக விரத உற்சவக் கிரியைகளை நிகழ்த்தினார். (ச-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய மாசிமக விரத உற்சவத்தை முன்னிட்டுத் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்திலிருந்து துர்க்கா தேவி ஆலயம்வரை கடந்த திங்கட்கிழமை பாற்குடப்பவனி நடைபெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி இராஜநாயகத்தின் ஓராண்டு நினைவஞ்சலி

கொழும்பு, மார்ச் 5

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் பாரதி இராஜநாயகத்தின் ஓராண்டு நினைவஞ்சலி, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் நினைவுரை, பாரதி ஒரு மனித நேய ஊடகன் எனும் நினைவு மலர் வெளியீடு என்பன இடம்பெற்றன. விசேட அதிதிகளுக்கு நூல் பிரதிகள் வழங்கப்பட்டன. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீ கஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (க)



யுனிசெப் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் சொண்ட் நிறுவனம் நடைமுறைப்படுத்தும் சமூக ஒற்றுமைக்கான பொறுப்பான டிஜிற்றல் சமூகத் திட்டத்தின்கீழ் வெறுப்புப் பேச்சு தொடர்பான விழிப்புணர்வு ஒரு நாள் பயிற்சிப் பட்டறை கடந்த திங்கட்கிழமை சங்கானை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வளவாளர்களாக நவரத்தின ராஜா டினோஜா, சண்முகம் செந்தூர்ராஜா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினர். (ச-159)





## யாழ்ப்பாணத்தை பசுமையாக்கும் விசேட செயற்றிட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்.மாவட்டத்தைப் பசுமையான மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன்மிக்க நகரமாக மாற்றியமைக்கும் விசேட செயற்றிட்டம் இம்பக்ட் அணியால் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது. இதுதொடர்பான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர்செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக 1000 மரங்களை நடுகைசெய்தல், நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு குறுங்காட்டை உருவாக்குதல், பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் நிறுவன வளாகங்களைச் சூழப் பசுமையாக்குதல், நகரத் தூய்மையைப் பேணுதல் மற்றும் 2 முதல் 3 சேதனப்பசளை அலகுகளை உருவாக்குதல் போன்ற முக்கியமான செயன்முறைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின்மூலம் நிலப்பரப்பின் வெப்பநிலையைக் குறைத்தல், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரித்தல், மண்ணரிப்பைத் தடுத்தல், பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற பலநன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ்.மாநகரசபையின் பிரதி முதல்வர் இம்மானுவேல் தயாளன், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடப் பீடாதிபதி ஆர்.சுரேந்திரகுமாரன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகள், யாழ். மாநகரசபையின் பொறியியலாளர், இலங்கை மின்சாரசபையின் அதிகாரிகள் மற்றும் இம்பக்ட் அணியின் பிரதிநிதிகள் எனப்பலரும் பங்கேற்றனர். (க-66)

நல்லூர் கிங்டம் லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட இலவச கண் பரிசோதனை முகாமில் கண்புரையால் பாதிக்கப்பட்ட 42 பேருக்கு அண்மையில் இலவச கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (ச-9)






சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தத் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு பூரணை தினமான நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)



வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்கரைப் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவுசெய்யப்பட்டது. சிரமதானப்பணியில் முள்ளியான் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் கலந்துகொண்டனர். (ச-66,422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையை...

இலங்கையின் தெற்கு கடற்பரப்பில் இருந்து 40 மைல் தொலைவில் உள்ள சர்வதேச கடற்பரப்பில் வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமது படைகள்தான் இத்தாக்குதலை நடத்தின என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி உறுதிப்படுத்தினார்.

இந்தியாவின் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற கடற்படை பயிற்சியை நிறைவு செய்துவிட்டு, இந்தியாவில் இருந்து ஈரான் நோக்கி பயணிக்கையிலேயே அந்தக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கப்பலில் சுமார் 180 பேர்வரை பயணித்துள்ளனர். அவர்களில் 36 பேர் இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படையால் மீட்கப்பட்டு காலி ஹராபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 80க்கும் மேற்பட்டோர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் காணாமற்போயுள்ள நிலையில், அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-44)

## 3 லட்சம்...

ஆர்வம்காட்டி வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, யாழ்ப்பாணத்துக்கு நேற்று 47 கொள்கலன்களில் 3 லட்சத்து 10 ஆயிரத்து 200 லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-17)

## போர்ப்...

யில், இந்த விடயம் சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.

ரொய்ட்டர்ஸ் உள்ளிட்ட ஊடகங்கள் பலவும் இந்தத் தாக்குதலுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விவகாரம் இலங்கைக்கு தூதரக ரீதியாக சில சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்று நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## டீசல்...

பட்டனர். அவர்களிடம் இருந்து 800 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்தே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. டீசலைப் பதுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## மனிதாபிமான...

விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் ஈரானிய கடற்படைக்குச் சொந்தமான 'ஜரிஸ்டெனா' என்றகப்பல் மூழ்குகின்றது என இன்று (நேற்று) அதிகாலை 5:08 மணியளவில் கடற்படைக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து உடனடியாகச் செயற்பட்ட இலங்கைக் கடற்படை மீட்புப் படகுகளை அனுப்பி வைத்தது. கப்பலில் 180 பேர்வரை இருந்துள்ளனர். விமானப்படை மற்றும் கடற்படையின் கூட்டு நடவடிக்கையின் மூலம், கடும் ஆபத்தில் இருந்த சுமார் 30 பேர் மீட்கப்பட்டனர். அவர்கள் ஹராப்பிட்டிய போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

1979ஆம் ஆண்டின் சர்வதேச கடல்சார் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பானஉடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், எமது கடல் எல்லைக்கு அருகாமையில் கப்பலொன்றுக்கு ஆபத்தெனில் நாடு, இனம் மற்றும் எவ்வாறு விபத்துக்குள்ளானது என்பன தொடர்பில் கருத்திக்கொள்ளாது மனிதநேயத்தின் அடிப்படையில் உதவ வேண்டும். அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இந்த விடயத்தில் இலங்கை தலையிட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## காணாமற்போன...

இரண்டு மீனவர்கள் காணாமற்போன நிலையில் இதுவரை அவர்கள் மீட்கப்படாமை மிகுந்த வேதனைக்குரிய விடயம். அதிலும், அந்த இருமீனவர்களையும் தாம் கண்டதாகவும், அவர்களுக்கு உணவும் எரிபொருளும் வழங்கியதாகவும் இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை மீனவர்களிடம் தெரிவித்த ஒலிப்பதிவு இருக்கின்ற நிலையில், கடற்றொழில் அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏற்க முடியாத விடயம். எனவே, அந்த இரு மீனவர்களையும் மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-20)

## ஆவளை...

வலி.வடக்கு ஆவளை பகுதியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் மறுநாள் கரை திரும்பாத நிலையில், அது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதையடுத்து சக மீனவர்கள் தேடுதல்பணிகளைமுன்னெடுத்தபோது, காணாமற்போன இரு மீனவர்களும் போதிய எரிபொருள் இல்லாமல் கடலில் திண்டாடிய நிலையில், இந்திய மீனவர்கள் அவர்களுக்கு உணவும் எரிபொருளும் கொடுத்து உதவிய விடயம் தெரியவந்தது. எனினும், இதுவரை அந்த இரு மீனவர்களும் மீட்கப்படவில்லை. இதையடுத்தே, மீட்பு நடவடிக்கைக்கு அரச தரப்பால் உதவிகள் வழங்கப்படவில்லை என்று சக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமற்போன மீனவர்கள் தொடர்பில் நாங்கள் காங்கேசன்துறை பொலிஸாருக்கும், கடற்படையினருக்கும் தகவல் வழங்கியுள்ளோம். எனினும் இதுவரை எமக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. கடந்த திங்கட்கிழமை கச்சதீவுக்கு அருகாக இந்திய எல்லைக்கு அருகில் குறித்த இரு மீனவர்களையும் கண்டதாகவும் அவர்களுக்கு உணவும் நீரும் வழங்கியதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்திருந்தனர். இதன்பின்னர் அண்ணளவாக 3 ஆயிரத்து 500 லீற்றர் எரிபொருளைப் பயன்படுத்தி நாங்கள் தேடுதல்களை மேற்கொண்டுள்ளோம். இதுவரை எந்தப் பயனும் இல்லை.

முல்லைத்தீவைச் சேர்ந்த மீனவரொருவர் காணாமற்போன நிலையில், அவர் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டார். அத்தகைய நடவடிக்கையை கடற்படையினர் ஏன் மேற்கொள்ளவில்லை? என்ற கேள்வி எழுகின்றது. கடற்றொழில் அமைச்சரிடம் முறையிட்ட போதிலும், அவரும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை - என்றனர். (அ-ம-27)

யாழ். மாவட்டத்திலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 34 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இன்று வியாழக்கிழமை, 2 லட்சத்து 90 ஆயிரத்து 400 லீற்றர் பெற்றோலும், 19 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 400 லீற்றர் மண்ணெண்ணையும் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-17)

## ம.எண்ணெய் இன்று விநியோகிக்கப்படும் இடங்கள்

| முகவர் | இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| யாழ்.மாநகர ப.நோ.கூ.ச. | யாழ்ப்பாணம் | 6,600 |
| கே.சண்முகரட்ணம் | காரைநகர் | 6,600 |
| கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.ச. | நெல்லியடி | 6,600 |
| தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச. | கொடிகாமம் | 6,600 |
| பருத்தித்துறை ப.நோ.கூ.ச. | வல்வெட்டித்துறை | 6,600 |
| வலி.வடக்கு ப.நோ.கூ.ச. | அச்சுவேலி | 6,600 |
| வலி.கிழக்கு ப.நோ.கூ.ச. | கோப்பாய் | 6,600 |
| சுன்னாகம் ப.நோ.கூ.ச. | உடுவில் | 6,600 |
| புங்குடுதீவு ப.நோ.கூ.ச. | புங்குடுதீவு | 6,600 |
| வேலணை ப.நோ.கூ.ச. | வேலணை | 6,600 |
| பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.ச. | பண்டத்தரிப்பு | 6,600 |
| ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச. | ஊர்காவற்றுறை | 6,600 |
| எம்.எஸ்.குருநகர் | குருநகர் | 13,200 |
| எஸ்.தர்மவரதன் | மருதனார்மடம் | 6,600 |
| சிலோன் பிஷரி கார்பரீஸ் | மயிலிட்டி | 13,200 |
| பி.வரதராஜசிங்கம் | யாழ்ப்பாணம் | 6,600 |
| வின்சன்ட் டி பவுல் | பருத்தித்துறை | 26,400 |
| அபிஷான் நிரப்பு நிலையம் | மந்திகை | 6,600 |
| ஆறுமுகம் தனஞ்சயன் | காக்கைதீவு | 6,600 |

## பெற்றோல் இன்று விநியோகிக்கப்படும் இடங்கள்

| முகவர் | இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| எம்.குணரட்ணம் | பரமேஸ்வராச் சந்தி | 13,200 |
| எஸ்.தர்மவரதன் | மருதனார்மடம் | 13,200 |
| பண்டத்தரிப்பு ப.நோ.கூ.ச. | பண்டத்தரிப்பு | 6,600 |
| கே.தேவகுருநாதன் | கல்வியங்காடு | 6,600 |
| சாவகச்சேரி ப.நோ.கூ.ச. | சாவகச்சேரி | 13,200 |
| மல்லாகம் ப.நோ.கூ.ச. | மல்லாகம் | 6,600 |
| யாழ்ப்பாணம் ப.நோ.கூ.ச. | யாழ்ப்பாணம் | 6,600 |
| தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. | காங்கேசன்துறை | 6,600 |
| சங்கானை ப.நோ.கூ.ச. | சித்தன்கேணி | 6,600 |
| லிவர்பூல் நவிகேஷன் | யாழ்ப்பாணம் | 6,600 |
| கே.சண்முகரட்ணம் | காரைநகர் | 6,600 |
| நெல்லியடி ப.நோ.கூ.ச. | நெல்லியடி | 6,600 |
| கைதடி ப.நோ.கூ.ச. | கைதடி | 6,600 |
| மானிப்பாய் ப.நோ.கூ.ச. | மானிப்பாய் | 6,600 |
| கொடிகாமம் ப.நோ.கூ.ச. | கொடிகாமம் | 13,200 |
| ராஜன் உமையாள் | யாழ்ப்பாணம் | 13,200 |
| நல்லூர் ப.நோ.கூ.ச. | கல்வியன்காடு | 6,600 |
| அச்சுவேலி ப.நோ.கூ.ச. | அச்சுவேலி | 13,200 |
| என்.எஸ்.நாகலிங்கம் | சுன்னாகம் | 6,600 |
| கோப்பாய் ப.நோ.கூ.ச. | கோப்பாய் | 6,600 |
| சுன்னாகம் ப.நோ.கூ.ச. | உடுவில் | 6,600 |
| மார்க்பெட் | யாழ்ப்பாணம் | 19,800 |
| வேலணை ப.நோ.கூ.ச. | வேலணை | 6,600 |
| புலோலி ப.நோ.கூ.ச. | புலோலி | 6,600 |
| ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச. | ஊர்காவற்றுறை | 6,600 |
| உடுப்பிட்டி ப.நோ.கூ.ச. | புறாபொறுக்கி | 6,600 |
| ஏ.எம்.தனநாயகம் | கொக்குவில் | 6,600 |
| ஜே.கனகராசன் | சுன்னாகம் | 6,600 |
| கே.தர்சினி | சண்டிலிப்பாய் | 6,600 |
| பி.வரதராஜசிங்கம் | பிரதான வீதி | 6,600 |
| என்.விசுவலிங்கம் | சிறுப்பிட்டி | 6,600 |
| வின்சன்ட் டி பவுல் | பருத்தித்துறை | 13,200 |
| [illegible] | உரும்பிராய் | 6,600 |
| [illegible] நிரப்பு நிலையம் | யாழ்ப்பாணம் | 13,200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கனலி' இதழ் வெளியீடும் குறுந்திரைப்பட விழாவும்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாண வர்களால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகை 'கனலி' இதழ் 6 வெளியீ டும், குறுந்திரைப்பட விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. பெண் பிள்ளைகள் ஆபத்தை எதிர்கொள்பவர்களாக மாத்திரம் இல்லாமல் தமக் கான சவால்களை எதிர்க்கும் திறனையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் 'மறம்', மக்களுக்காகத் தன்னைத் தியாகம் செய்த பெண் போராளியின் உண்மைக் கதையான 'தீரா, கல்வி அவளுக்குப் பட்டமும் பதவியும் அல்ல; அது வறுமைக் கட்டிலிருந்து வெளியேறும் ஒரே ஒரு படிக்கட்டு; மரணத் தருவாயிலும் தனது பட்டதாரி மகனைக் கரைசேர்க்கத் துடிக்கும் மலையகத்தாயின் உண்மைக் கதை 'தாய்', யுத்தத் தின் போது காணியை இழந்த, தாத்தாவிற்கும், பேரனுக்கும் இடையிலான பாசம்; தாத்தாவின் உழைப்பினால் வாங்கிய காணியை இழந்ததால் பேரன் எதிர்கொள்ளும் பிரச்சினை களைப் பேசும் 'தாய்நிலம்', காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர் பான ஏக்கத்தை முன்வைக்கும் 'நாள் 3036', தாயை இழந்த மகளின் கனவை நிறைவேற்றத் துடிக்கும் தந்தைக்கும் மகளுக் கும் இடையிலான பாசப் போராட்டத்தைப் பதிவுசெய்யும் 'சுவடு', மலையகத்தில் நில உரிமைக்கான குரல்களை எடுத்துக்காட்டும் 'நிலவேட்கை', இன்றைய காலகட்டத்தில் மனிதாபிமானம் அற்ற வகையில் செயற்படும் சமூக ஊடகங்களைப் பிரதிபலிக்கும் 'கலியுகம்', சமூக ஊடகங்களில் பரவும் இணை யக் குற்றவாளிகளைக் கண்டறியும் துப்பறிவாளரின் முயற்சி களைச் சொல்லும் 'டிடெக்டிவ்', வாழ்வில் தான் செய்த தவறு களை உணரும் ஒரு மனிதனின் கதையான 'உணர்வழி', தனது பிள்ளையைப் போருக்காக அனுப்பி அப்பிள்ளை வீரம ரணம் எய்தியும் அப்பிள்ளை உயிரோடு இருப்பதாக எண்ணி வாழும் தாயின் நிலையைப் பேசும் 'பின்னல்', தன்னுயுரைக் கொடுத்து பல உயிர்களைக் காப்பாற்றும் தியாகத்தினை வெளிக்காட்டும் 'ஈகம்', வினை விதைத்த வன் வினை அறுப்பான் என்ற கூற்றின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் 'மூன்றாம் விதி', ஒரு பெண் தன் இலக்கை நோக்கிப் பயணிக்கையில் தன்னம்பிக் கைக் குறைவாலும், சுற்றியிருப்பவர்க ளின் எதிர்மறை விமர்சனங்களாலும் முடங்கிப்போகும்போது அவள் தீர்மானிக்கும் ஒரு நொடியின் மாற் றத்தை பேசும் 'ஆனால்', சரியான தலைமை இல்லா ஓர் சமூகம் வழிபிறழ் வான பாதைகளில் பயணித்துக் கொண்டி ருப்பதைப் பறைசாற்றும் 'சாயல்' ஆகிய குறுந்திரைப்படங்கள் இதன்போது திரை யிடப்படவுள்ளன. (ச)

## வேலைவாய்ப்பு

விற்பனை பிரதிநிதி
(ஆண், பெண்)
இடம்: யாழ்ப்பாணம்.
076 324 9977

## இதய அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
குகதீஸ் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
தாமோதரம்பிள்ளை
தேவதாஸ்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குகதீஸின் நண்பர்கள்.
T.P. 076 075 9143
077 031 9073

தோற்றம் 23.02.1958 மறைவு 03.03.2026

(cs 31384) (N-1)

## லஞ்ச் சீற் பாவனைக்கு வலி.மேற்கில் தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 5

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல் லைக்குட்பட்ட உணவு கையாளும் நிறுவ னங்களில் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் லஞ்ச் சீட் பாவனைக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

மக்களின் ஆரோக்கியத்தை கருத்திற் கொண்டு மேற்குறித்த நிறுவனங்கள் தமது சமூக அக்கறையை வெளிப்படுத்தி மேற்படி திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் கோரிக்கைவிடுத்துள் ளார். (ம)

## நடைபாதை விற்பனை யாழ். மாநகரில் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல் லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் வணிக நிலையங்க ளில் நடைபாதை விற்பனைக்குத் தடை விதிக்கப்படும் என்று யாழ். மாந கர மேயர் மதிவதனிவிவேகானந்த ராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே, மேயர் மதிவதனி இவ்வாறு தெரிவித் தார்.

பொதுமக்களுக்கு இடையூறு விளை விக்கும் வகையில் கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாக வைக்கப்படும் பொருள்களை அகற்ற ஏற்கனவே அவகாசம் வழங்கப்பட் டது. எனினும் இந்த அறிவுறுத்தலை வர்த்தக நிலையங்கள் முற்றாகப் பின் பற்றவில்லை என்பதுகுறிப்பிடத்தக் கது. (ம-26)

## வேலையாட்கள் தேவை

இயக்கச்சியில் இயங்கிவரும் தொழிற்சாலைக்கு ஆட்கள் தேவை. (இரவு நேரம்)
அனுபவம் விரும்பத்தக்கது.
076 324 9977

## மதுபானசாலைக்கு வேலையாட்கள் தேவை

* விற்பனையாளர்
* முகாமையாளர்

T.P: 076 6027 624
077 9911 025

CS 31402A

## ஐந்துநூல்களின் அறிமுக விழா!

யாழ்ப்பாணம், மார்ச் 5

வயிரமுத்து திவ்வியராஜன் எழுதிய ஐந்து நூல்களின் அறிமுக விழா, யாழ்ப்பா ணம் வரணி மத்திய கல்லூரி மண்டபத் தில் நாளை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

மாறிய நாள்களும் மாறாத சூரியனும், இன்னும் கொஞ்சநேரம் இருந்தால்தான் என்ன?, ஒரு சின்னக்கதை (பாகம் 1), சாவைத் தள்ளிவை, ஒரு சின்னக்கதை (பாகம் 2) ஆகிய நூல்களே இவ்வாறு வெளியிடப்படவுள்ளன.

வரணி மத்திய கல்லூரி அதிபர் இரத்தின சிங்கம் கோகுலராகவன் தலைமையில் இந்த நூல் வெளியீடுகள் இடம்பெறவுள் ளன. (ம)

## மரண அறிவித்தல்



திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை

தாவடி வடக்கு, கொக்குவில் என்ற முகவரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை அவர்கள் இன்று (04.03.2026) புதன்கிழமை காலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் மைத்துனி பாக்கியம், காலஞ் சென்ற பொன்னையா மைத்துனியும், சரஸ்வதி, காலஞ்சென்ற சரஸ்வதி இராசலிங்கத்தின் மைத்துனி, செல்லர் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், அமரர் கருணாமூர்த்தியின் பாசமிகு தாயும், வாசுகியின் அன்பு மாமியும், துசிதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), துசிந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), டுசிதா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2026) வியாழக் கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

CS 31401A



# சுருவில் கடற்கரையில் 368 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

ஊர்காவற்றுறை சுருவில் கடற்கரையில் 368 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் ளார். ஊர்காவற்றுறை விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், முன்னெடுக்கப்பட்ட சுற் றிவளைப்பிலேயே இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகந பர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலை யில், மேலும் இருவர் தப்பிச் சென்றுள் ளனர். அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தற்போதுமுன்னெடுக்கப் பட்டு வருகின்றது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.